# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | சுந்தரராஜன் | நாள் | 19.12.2023 |
| தகப்பனார் பெயர் | அருணாச்சலம் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

15) 1964 ம் வருடத்தில் மாரிமுத்து கவுண்டர் குடும்பத்திற்குள் ஏற்படுத்தி கொள்ளப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தில் அவரது பெண் மக்களான வாதியும், அவரது சகோதரிகளும் தரப்பினர்களாக சேர்க்கப்படாததால், மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால், அவ்வாறு 1964 ம் வருடத்தில் மாரிமுத்து கவுண்டர் குடும்பத்திற்குள் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டது குறித்து எனக்கு தெரியாது.

16) 1ம் பிரதிவாதி வரதராஜன் தாவா சொத்தை எப்போது, யாரிடம் கிரயம் வாங்கினார் என்றால், 28.11.1990 ம் தேதியில் மாரிமுத்துவிடமிருந்து கிரயம் வாங்கினார். மேற்படி கிரயப்பத்திரத்திலும் கூட மாரிமுத்து கவுண்டரின் ஆண் வாரிசுகள் மட்டும் தான் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றாலும், அவரது பெண் வாரிசுகள் யாரும் கையெழுத்து போடவில்லை என்றாலும் சரிதான். மேற்படி சொத்து மாரிமுத்து கவுண்டரின் பூர்வீக சொத்து என்றால் சரிதான்.

17) அவ்வாறு தாவா சொத்து மாரிமுத்து கவுண்டரின் பூர்வீக சொத்து என்பதால், மேற்படி சொத்தில் அவரது பெண் வாரிசுதாரரர்களுக்கும் பாக உரிமை உள்ள நிலையில், மேற்படி பெண் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காமல் மாரிமுத்து கவுண்டர் மற்றும் அவரது ஆண் வாரிசுகளால் கடந்த 1964 ம் வருடத்தில் ஏற்படுத்திகொள்ளப்பட்ட குடும்ப பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்றாலும், அதேபோல் கடந்த 1990 ம் வருடத்தில் மாரிமுத்து கவுண்டரும், அவரது மகன்களும் சேர்ந்து 1 ம் வாதிக்கு பூர்வீக சொத்தை விற்பனை செய்த கிரய ஆவணமும் செல்லாது

என்றால், சரியல்ல.

18) 1ம் பிரதிவாதி மாரியம்மாளுக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால், அவரை தரப்பினராக சேர்க்காமல் மேற்படி சொத்து குறித்து ஏற்படுத்தப்பட்ட உரிமை மாற்று ஆவணங்களும், அதன் பேரில் பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட வருவாய் ஆவணங்களும் செல்லாதவை என்றால், சரியல்ல. மேற்படி மாரிமுத்து கவுண்டர் பணவழக்கில் நீதிமன்றத்தின் தீர்ப்பின் படி ஏலத்தில் மேற்படி சொத்தை 1ம் வாதிக்கு விற்பனை செய்துள்ளதால், 1ம் பிரதிவாதி சொத்தில் உரிமை கோர முடியாது.

19) எந்த வருடத்தில் மாரிமுத்து கவுண்டர், செல்லமுத்து வாதியாரிடம் கடன் வாங்கினார் என்றால், மேற்படி விவரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் நீதிமன்ற ஏலத்தில் 1ம் வாதி சொத்தை கிரயம் பெற்ற சங்கதி குறித்து எனக்கு தெரியும். எந்த நீதிமன்றத்தில் 1ம் வாதி ஏலம் எடுத்தார் என்றால், சங்ககிரி நீதிமன்றத்தில் ஏலம் எடுத்தார். மேற்படி வழக்கின் எண்ணோ, எந்த தேதியில் கிரயம் எடுத்தார் என்ற விவரமோ எனக்கு தெரியாது.

20) வரதராஜன் நீதிமன்றம் மூலமாக ஏலம் எடுத்ததாக நான் சொல்லும் நிலையில், நீதிமன்றத்தால் தான் கிரயப்பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டதா என்றால், மேற்படி கிரயப் பத்திரத்தில் நீதிமன்ற தீர்ப்பு படி கடனை அடைக்க வேண்டி சொத்தை விற்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும், கிரயப்பத்திரத்தில் மேற்படி சொத்து பிதுர்ராஜ்ய சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளதால், 1ம் பிரதிவாதி மாரியம்மாளுக்கு உரிமை உள்ளது என்பதால், மேற்படி கிரயம் செல்லாது என்றால் சரியல்ல.

21) மேற்படி 1ம் வாதியின் பெயரிலுள்ள கிரய ஆவணம் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்திலுள்ள பாக உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் கூட்டு பங்குரிமையர் என்பதால், ஒரு கூட்டு பங்குரிமையருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றாலும், விளம்புகை பரிகாரம் கோராததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல

என்றாலும் சரியல்ல.

22) 1ம் பிரதிவாதி ஏற்கனவே பாகபிரிவினை கோரி அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் வாதியின் மீது அ.வ.எண்.9/2013 என்ற வழக்கு தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளதால், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்ய இயலாது என்றால், சரியல்ல.

23) எனவே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும், 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி அ.வ.எண்.9/2013 என்ற வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றாலும், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.